தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆனி 7, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஜூன் 21, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

இனிமையான சொற்கள் இருக்க அவற்றைச் சொல்லாமல் கடுமையான சொற்களைச் சொல்வது பழத்தை விடுத்து காயைப் பறித்து உண்பதற்கு ஒப்பாகும். (குறுக்கீடு)

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1. தகவல் கோரல்

20–6–2016 அன்றைய பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில வார்த்தைகளுக்கு எதிர்ப்பு – அது தொடர்பாக பேரவைத் தலைவரின் தீர்ப்பைக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் உரையாற்றியபோது, சில வார்த்தைகளுக்கு நாங்கள் எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்த நேரத்தில், "அவைக் குறிப்பை நான் படித்துப் பார்த்ததற்குப்பிறகு முடிவு செய்கிறேன்" என்ற ஒரு தீர்ப்பை நீங்கள் இந்த அவையிலே வழங்கினீர்கள். எனவே, அதுகுறித்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*